JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No. 67/2022    Date:01.08.2025    P.W. 1 / LW 2

| | |
|---|---|
| பெயர் | **திரு. நந்தகுமார்** |
| தந்தை பெயர், க/பெ | **திரு. ரவீந்திரநாதன்** |
| முகவரி | No. AD4 Home stead, 111 OMR Kandhachavadi, chennai 96 |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | |
| மதம் | |
| வயது | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 1st day of August 2025.

எதிரி ஆஜாில் உள்ளார்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் புகார் கொடுத்துள்ள குமரவேல் என்பவர் எங்களது நிறுவனத்தின் செக்ரியூட்டி சர்விசின் மேலாளர் ஆவார். எங்களது நிறுவனத்திலிருந்து மேற்கண்ட மெஜஸ்டிஸ் செக்ரியூட்டி சர்விஸ்யை நடந்துவதற்கு நியமித்தோம். நான் IL and FS finance service Ltd முதல் நிலை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். அம்பத்தூரில் உள்ள Best and Crompton Engineering Ltd நிறுவனத்திற்கு எங்களது நிறுவனம் கடன் வழங்கியிருந்தது. அதனை சர்பசி சட்டத்தின் படி எங்களது நிறுவனம் கைப்பற்றியது. மேற்கண்ட செக்ரியூட்டி சர்விசை நாங்கள் கைப்பற்றியை மேற்கண்ட நிறுவனத்தின் காவல் பணிக்கு நியமித்தோம். அந்த கைப்பற்றிய நிறுவனத்தில் இரும்பு பொருட்கள் திருடுபோயிருந்தது. அதனை அம்பத்தூர் எஸ்டேட் போலிசார் பிடித்துவிட்டார்கள். அதன் பின்பு மேற்கண்ட செக்ரியூட்டி சர்விஸ்லிருந்து போலிசாரிடம் புகார் கொடுக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு தகவல் காவல் நிலையத்தில் இருந்து கிடைக்கப்பெற்றது என்றால் காலை 11.00 மணியளவில் போலிசார் தகவல் சொன்னார்கள். அப்போது நான் கேரளாவில் இருந்தேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது பேச மட்டும் தெரியும். எனது போலிஸ் விசாரணை வாக்குமூலத்தில் நிறுவனத்திற்கு முன்பாக வாகனத்தில் பொருட்களுடன் நின்றுகொண்டிருந்ததாகவும் அதனை நானோ எனது நிறுவனத்தை சேர்ந்தவர்களோ போலிசாரிடம் ஒப்படைத்தாக சொல்லியிருந்தால் அது தவறு

மேற்கண்ட பொருட்கள் நிறுவனத்திற்கு சொந்தமானது என்பதற்கு எந்த இன்வைஸ் கொடுக்கவில்லை. அங்கு என்னென்ன பொருட்கள் கைப்பற்றப்பட்டிருந்தது என்பதற்கு பட்டியல் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கை பற்றி நேரடியாக எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதால் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட கைப்பற்ற பொருட்கள் எங்களால் கைப்பற்றப்பட்ட நிறுவனத்திற்கு சொந்தமானது என்பதற்கு எந்தவித தனிப்பட்ட அடையாளம் இருந்ததா என்று எனக்கு தெரியாது.

**மறு விசாரணை / இல்லை**

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur